# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.42/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 (LW5 ) |
| Name : | சாமிதுரை |
| Father's/Husband Name: | குழந்தைவேல் |
| Village : | N.புதூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 64 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.09.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி ராமு ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை கையெழுத்து மட்டும் போடுவேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் 02.02.2024 அன்று எங்கள் ஊரில் உள்ள மெயின்ரோட்டில் நகை திருடு போனது சம்மந்தமாக வி.களததூர் போலிசார் அங்கு வந்து வரைபடம் தயார் செய்தார்கள். அது தொடர்பாக மேற்படி ஆவணத்தில் நான் அங்கு வைத்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் தான் நான் அங்கு வைத்து கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர். பார்வை மகஜர் (அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) நீதிமன்றத்தில் சொல்லிய சங்கதிகளை நான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம்

இட்டீர்கள் என்றும் அதில் உள்ள விவரங்கள் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.42/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 (LW6 ) |
| Name : | சக்கராஜா |
| Father's/Husband Name: | |
| Village : | N.புதூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 59 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.09.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி ராமு ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நான் 5ம்வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் கைபற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ஆவணத்தில் துரைசாமி என்பவரும் கையொப்பம் செய்தார். நானும் துரைசாமியும் 09.02.2024 அன்று தொழுதூர் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அயன்பேரையூர் கைகாட்டி அருகே போலிசார் அங்கு நின்று திருட்டு சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். அங்கிருந்தவர்கள் என்ன சொன்னார்கள் என்று நான் சரியாக காதில் வாங்கவில்லை. நானும் துரைசாமியும் சென்றோம். அங்கிருந்தவர்களை தற்போது அடையாளம் காட்ட இயலவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகஜரில் உள்ள கையெழுததுக்கள் **அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3** ஆக குறியீடு

செய்யப்படுகிறது.) என் முன்பாக போலிசார் என்ன கைபற்றினார்கள் என்று நான் கவனிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

(i) ஆஜர் எதிரி ராமு நான் கையெழுத்திட்ட இடத்தில் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் என் முன்பாக எழுதிய ஆவணத்தை படித்து காட்டி தான் கையெழுதது பெற்றார்கள் என்றால் சரிதான். என் முன்பாக என்னிடம் காட்டப்படும் தங்க கத்தி மற்றும் புகைபடத்தில் உள்ள தங்க செயினை கைபற்றினார்களா என்றால் நான் பார்க்கவில்லை. போலிசார் அயன்பேரையூர் பிரிவு சாலையில் N.புதூர் சாலையில் நடந்த திருட்டு சம்மந்தமாக விசாரித்தார்கள். போலிசார் அந்த இடத்தில் வைத்து எதிரியை கைது செய்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரியை உள்நோக்கத்தோடு எதிரியை அடையாளம் தெரியவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் கடந்த 09.02.2024 அன்று அதிகாலை 7 மணியளவில் அயன்பேரையூர் பிரிவு சாலையில் இருந்தபோது ஆஜர் எதிரி தானாக முன்வந்து N.புதூர் மெயின் ரோட்டில் நடந்து சென்ற ஒரு வயதானவரிடம் தங்க செயினை பறித்ததாகவும் மேலும் பல்வேறு இடங்களில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் கூறினார் என்றும் அதனை போலிசார் பதிவு செய்ததாகவும் அவரிடம் இருந்து கத்தி, தங்கசெயினை உள்ளிட்ட பொருட்களை கைபற்றினார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரியிடம் ஆதாயம் பெற்றுக்கொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(i) இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

Calendar Case No: CC.42/2024

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.5 (LW7 )

Name : துரைசாமி

Father's/Husband Name:

Village :

Taluk : வேப்பந்தட்டை

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.09.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி ராமு ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நான் 4ம்வகுப்பு வரை படித்துள்ளேன். சாட்சி சக்கராஜாவை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ஆவணத்தில் சக்கராஜா என்பவரும் கையொப்பம் செய்தார். நானும் சக்கராஜாவும் 09.02.2024 அன்று தொழுதூர் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அயன்பேரையூர் கைகாட்டி அருகே போலிசார் அங்கு நின்று கொண்டு N.புதூரில் நடைபெற்ற திருட்டு சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். அதற்கு ஆதரவாக அங்கு வைத்து நாங்கள் கையொப்பம் செய்தோம் அங்கு கும்பலாக இருந்தது. ஆஜர் எதிரி தான் திருடியதாக சொன்னார்கள் அவரை கவனிக்கவில்லை.என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகஜரில் உள்ள கையெழுததுக்கள் **அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) என்

முன்பாக போலிசார் என்ன கைபற்றினார்கள் என்று நான் கவனிக்கவில்லை.போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(i) ஆஜர் எதிரி ராமு நான் கையெழுத்திட்ட இடத்தில் இருந்தாரா என்றால் நான் கவனிக்கவில்லை. போலிசார் என் முன்பாக எழுதிய ஆவணத்தை படித்து காட்டி தான் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். என் முன்பாக என்னிடம் காட்டப்படும் கத்தி மற்றும் புகைபடத்தில் உள்ள தங்க செயினை கைபற்றினார்களா என்றால் கைபற்றவில்லை. போலிசார் அயன்பேரையூர் பிரிவு சாலையில் N.புதூர் சாலையில் நடந்த திருட்டு சம்மந்தமாக விசாரித்தார்கள். போலிசார் அந்த இடத்தில் வைத்து எதிரியை கைது செய்தார்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிரியை உள்நோக்கத்தோடு எதிரியை அடையாளம் தெரியவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் கடந்த 09.02.2024 அன்று அதிகாலை 7 மணியளவில் அயன்பேரையூர் பிரிவு சாலையில் இருந்தபோது ஆஜர் எதிரி தானாக முன்வந்து N.புதூர் மெயின் ரோட்டில் நடந்து சென்ற ஒரு வயதானவரிடம் தங்க செயினை பறித்ததாகவும் மேலும் பல்வேறு இடங்களில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் கூறினார் என்றும் அதனை போலிசார் பதிவு செய்ததாகவும் அவரிடம் இருந்து கத்தி, தங்கசெயினை உள்ளிட்ட பொருட்களை கைபற்றினார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரியிடம் ஆதாயம் பெற்றுக்கொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(i) இல்லை